DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | அங்கம்மாள் |
| Father / Husband Name | சிவராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது எண்டத்தூர் கிராமத்தில் வசித்து ஏரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.02.2024 ம் தேதி காலை 9.45 மணிக்கு நானும் எனது மகனும் என் மகனுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எண்டத்தூரில் இருந்து மதுராந்தகம் வரும்போது பெரும்பாக்கம் குளக்கரை அருகே வரும்போது ஆஜர் எதிரிகள் எங்களை மடக்கி என் மகனை கையால் மூக்கு மற்றும் வாயில் அடித்து காயம் ஏற்படுத்தினார்கள், நான் அவர்களை கையெடுத்து கும்பிட்டு என் மகனை அடிக்க வேண்டாம் என்று சொன்னேன்.

2. என் மகனை மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்கு முடியாது என்று சொன்னதால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்கு Xray எடுத்து மூக்கு தண்டு உடைந்துவிட்டதாக சொன்னார்கள். நாங்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தோம். இது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3. புகாரை யார் எழுதியது என்றால் எங்களுடைய வழக்கறிஞர் எழுதினார். அதில் என்ன விவரம் இருந்தது என்றால் அதை எனக்கு படித்துக்காட்டினார்கள், யார் படித்துக்காட்டினார்கள் என்றால் என் மகன் படித்துக்காட்டினார். புகாரை நான் சொல்லி தான் எழுதினார். வழக்கு புகாருக்கு முன்பே என் மகனுக்கு எதிராகவும், சேஷாதிரி, சரவணன் ஆகியோர்களுக்கு எதிராகவும் எதிரிகளின் கிராமத்தை சேர்ந்தவர்கள் புகார் கொடுத்துள்ளார்கள் என்றாலும், அந்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக தான் இந்த புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் வைத்து போலிசும் என் மகனும் அடையாளம் காட்டியபிறகு தான் எதிரிகளை தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

4. எந்த தேதியில் புகார் அளித்தேன் என்றால் பிப்ரவரி 22ம் தேதி 9.00 மணியளவில் கொடுத்தேன். புகார் கொடுக்க நான் என் வழக்கறிஞர், என் மகன் ஆதிகேசவன் என்பவர் ஆகியோர் சென்றோம். என்னை போலிசார் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல, மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், என் மகன் மீதும் மற்ற இருவர் மீதும் எதிரிகளின் ஊரை சேர்ந்தவர்கள் வழக்கு போட்டுள்ளதால் நாங்கள் எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. காவல் துறையினரும் என் மகனும் அடையாளம் காட்டியபிறகு தான் எதிரிகளை தெரிந்துக்கொண்டேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | சாமுவேல் (எ) முருகன் |
| Father / Husband Name | சிவராஜ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது எண்டத்தூர் கிராமத்தில் வசித்து தனியார் கல்லூரியில் படித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 22.02.2024 ம் தேதி காலை 9.30 முதல் 10.00 மணிக்குள் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் எண்டத்தூரில் இருந்து மதுராந்தகம் வரும்போது பெரும்பாக்கம் குளக்கரையை தாண்டி வரும்போது ஆஜர் எதிரிகள் வழிமடக்கி என்னை கையாலும், கட்டையாலும் முகத்தில் அடித்தார்கள். எனக்கு மூக்கு மற்றும் முகத்தில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என்னை எங்கள் ஊரை சேர்ந்த ஆதிகேசவன் என்பவர் அவரது இருசக்கர வாகனத்தில் என்னை மதுராந்தகம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தார். பின்னர் அங்கு முடியாது என்பதால் 108 ஆம்புலன்ஸ் மூலம் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். எனக்கு மூக்கு தண்டுவடம் உடைந்துவிட்டது. 5 நாட்கள் நான் சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலிசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** எதிரிகளின் ஊர்காரர்கள் எனக்கு எதிராக புகார் கொடுத்ததால் எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, என்னை அடித்ததால் தெரியும். சம்பவம் நடந்ததும் நான் மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 10.00 மணிக்கு மேல் சென்றேன். புகார் எத்தனை மணிக்கு யார் கொடுத்தார் என்றால் என்னை மதுராந்தகம் மருத்துவமனையில் இருந்து செங்கல்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள், என் அம்மா தான் புகார் கொடுத்தார். புகார் கொடுக்க நான் காவல் நிலையம் சென்றேனா என்றால் இல்லை. என்னை மருத்துவமனையில் சேர்த்தது யார் என்றால் என் அண்ணன் ஆதிகேசவன். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து 22 ம் தேதி விசாரித்தார்கள். அப்போது என்னுடன் என் அம்மா மற்றும் மருத்துவர்கள் இருந்தார்கள். என் அம்மாவையும் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் எதை வைத்து என்னை அடித்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. உண்மையில் எதிரிகள் என்னை தாக்கியிருந்தால் எந்த ஆயுதத்தால் தாக்கினார்கள் என்று விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றாலும், நான் கீழே விழுந்ததில் தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. அந்த காயத்தை காரணமாக காட்டி எதிரிகள் தரப்பில் எனக்கு எதிராக கொடுத்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக என் அம்மா மூலம் பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | நித்தியானந்தம் |
| Father / Husband Name | ரங்கதாஸ் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பெரும்பாக்கம் கிராமத்தில் வசித்து கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 22.02.2024 ம் தேதி காலை 9.45 மணிக்கு நான் என் கடையில் இருந்தபோது ஆஜர் எதிரிகள் 3பேரும் அவர்களை வழிமடக்கி அசிங்கமாக பேசி கட்டை மற்றும் கொம்பால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள், அவர்களை எனக்கு 10 வருடங்களாக தெரியும். மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | மோகன் |
| Father / Husband Name | கோபலகிருஷ்ணன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பெரும்பாக்கம் கிராமத்தில் வசித்து நான் பேருந்தில் செக்கராக பணிசெய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 22.02.2024 ம் தேதி காலை 9.45 மணிக்கு நான் கிருஷ்ணன் கடை அருகே இருந்தபோது ஆஜர் எதிரிகள் 3 பேரும் அவர்களை வழிமடக்கி அசிங்கமாக பேசி கட்டை மற்றும் கொம்பால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள். மேற்படி சம்பவத்தை நேரடியாக பார்த்துவிட்டு ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | அசோக்குமார் |
| Father / Husband Name | பொன்னன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பெரும்பாக்கம் கிராமத்தில் வசித்து கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். சாட்சி குமார் என்பவரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 24.02.2024 ம் தேதி பகல் 12.00 மணிக்கு நானும் குமாரும் கிருஷ்ணன் மளிகை கடை அருகே இருந்தபோது போலிசார் ஆஜர் எதிரிகள் எண்டத்தூரை சேர்ந்த அங்கம்மாள் மற்றும் அவரது மகனை அடித்தது சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார செய்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகள் ஊர்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 383/2024

Miscellaneous :

Sessions : PW 6

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | குமார் |
| Father / Husband Name | எட்டியப்பன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 14.08.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது மதுர கிராமத்தில் வசித்து மேஸ்த்திரி வேலை செய்து வருகிறேன். சாட்சி அசோக்குமார் என்பவரை தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 24.02.2024 ம் தேதி பகல் 12.00 மணிக்கு நானும் அசோக்குமாரும் கிருஷ்ணன் மளிகை கடை அருகே இருந்தபோது போலிசார் ஆஜர் எதிரிகள் எண்டத்தூரை சேர்ந்த அங்கம்மாள் மற்றும் அவரது மகனை அடித்தது சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார செய்து பார்வை மகஜரில் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. மேற்படி பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு தற்போது எதிரிகள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.